# சிவபுராண மொழிபெயர்ப்பில் ஜி.யு.போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகள்

சி.காயத்ரீ

**ஆய்வுச் சுருக்கம்**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள விடயங்களை அதில் எந்த விதமான களங்கமும் ஏற்படாத வகையில் பிறிதொரு மொழிக்கு மொழி மாற்றம் செய்வதாகும். இவ்வாறான செயற்பாட்டில் பல்வேறு முறைமைகள் பின்பற்றப்படுகின்றன. மொழி பெயர்ப்பு செய்யப்படுவதன் நோக்கம், காரணங்கள், மொழிபெயர்ப்பு செய்யப்படும் விடயம், யாரை இலக்காகக் கொண்டு அம் மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது, அதன் தேவை போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் குறித்த ஒரு முறைமை பொருத்தமானதாக மொழிபெயர்ப்பாளரால் தேர்ந்தெடுக்கப்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் கீழைத்தேசங்களுக்கு வருகை தந்த மேலை நாட்டவர் பலரும் தமிழ் இலக்கியப் பனுவல்களை மொழிபெயர்ப்பு செய்யும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஜோர்ஜ் அக்லோ போப் என்ற மதகுருவும் இந்தப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அவர் நாலடியார், திருக்குறள், திருவாசகம் ஆகிய பனுவல்களை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்தார். இவற்றில் திருவாசக மொழி பெயர்ப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஞான நெறியில் நின்று இறைவன் மீது மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்ற திருவாசகம் எனும் தேன் துளிகள் ஈர்த்து ஈர்த்து உருக வைக்கும் தன்மை வாய்ந்தவை. இவற்றில் முதன்மையானது சிவபுராணம் ஆகும்.

இந்த ஆய்வில் சிவபுராண மொழிபெயர்ப்பில் ஜோர்ஜ் அக்லோ போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகள் பற்றியே ஆய்வு செய்யப்படுகிறது. உண்மையில் வெளிநாட்டு மதகுரு ஒருவர் தமிழ்ப்பனுவல் ஒன்றை ஆழ்ந்து கற்று மொழிபெயர்ப்பு செய்துள்ளமை போற்றற்குரிய விடயமாகும். சிவபுராணத்தை மொழிபெயர்க்கும்போது ஜி.யு.போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகளை இனங்காண்பதும் அந்த முறைமைகளில் அவர் கையாண்ட உத்திகளை அறிதலுமே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும். இவற்றை அறிந்து கொள்வது எதிர்கால மொழிபெயர்ப்பாளர்களுக்கு பயன் மிக்கதாக அமையும். மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணமும் ஜோர்ஜ் அக்லோ போப் எனப்படும் மதகுருவினுடைய சிவபுராண மொழிபெயர்ப்பும் முதல் நிலை வளங்களாக இந்த ஆய்வில் கொள்ளப்படுகின்றன.

**திறவுச்சொற்கள் :** மொழி பெயர்ப்பு , மூலமொழி , இலக்கு மொழி, நிகரன்கள் , ஒலிபெயர்ப்பு

**அறிமுகம்**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள விடயங்களை அல்லது செய்திகளை எந்த விதமான களங்கமும் இல்லாத வகையில் பிறிதொரு மொழியில் எடுத்துச் சொல்லும் செயற்பாடாகும். உண்மையில் ஒரு மொழியில் உள்ள கருத்துக்களை பிறிதொரு மொழியில் மாற்றும்பொழுது மூலமொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை என்பவை சிறிதும் மாறாமல் இலக்கு மொழியின் அமைப்பு மற்றும் தன்மைக்கேற்ப அமைக்கும் போதே அது சிறந்ததொரு மொழி பெயர்ப்பு ஆகிறது.

இவ்வாறான செயற்பாட்டில் பல்வேறு முறைமைகள் பின்பற்றப்படுகின்றன. இதன் மூலம் மூல மொழியில் கூறப்பட்டுள்ளதை சொற்களின் பொருளும் மொழி நடையும் மிகவும் இயல்பாகவும் பொருத்தமாகவும் அமையும் விதத்தில் இலக்கு மொழியில் மாற்றிக் கூற முடியும்.

மொழி பெயர்ப்புக் கற்கைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், gayachan57@gmail.com

குறித்த ஒரு பகுதியை மொழிபெயர்ப்பு செய்வதன் நோக்கம், அதனைச் செய்ய வேண்டியதற்கான காரணங்கள், மொழிபெயர்ப்பு செய்யப்படும் குறித்த அந்த விடயம், யாரை இலக்காகக் கொண்டு யாருக்காக அம்மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது, அதனை மொழிபெயர்க்க வேண்டிய தேவை போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் குறித்த ஒரு முறைமை பொருத்தமானதாக மொழிபெயர்ப்பாளரால் தேர்ந்தெடுக்கப்படும்.

**ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வில் சிவபுராண மொழிபெயர்ப்பில் ஜோர்ஜ் அக்லோ போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகள் பற்றியே ஆய்வு செய்யப்படுகிறது. சிவபுராணத்தை மொழிபெயர்க்கும்போது ஜி.யு.போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகளை இனங்காண்பதும் அந்த முறைமைகளில் அவர் கையாண்ட உத்திகளை அறிதலுமே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும். இவற்றை அறிந்து கொள்வது எதிர்கால மொழிபெயர்ப்பாளர்களுக்கு பயன் மிக்கதாக அமையும்.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வில் ஒப்பீட்டு ஆய்வு அணுகு முறை பின்பற்றப்பட்டுள்ளது. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய சிவபுராணமும் ஜோர்ஜ் அக்லோ போப் செய்த அதன் மொழி பெயர்ப்பும் ஒப்பு நோக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுப் பரப்பு**

ஜோர்ஜ் அக்லோ போப் என்ற மதகுரு மொழி பெயர்ப்புப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு நாலடியார், திருக்குறள், திருவாசகம் ஆகிய பனுவல்களை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்தார்.

இவை எல்லாவற்றிலும் மேலானதாகவும் குறிப்பிடக்கூடியதாகவும் கருதப்படக்கூடியது திருவாசக மொழிபெயர்ப்பே ஆகும். இந்த ஆய்வானது சிவபுராண மொழிபெயர்ப்பில் போப் கையாண்ட மொழிபெயர்ப்பு முறைமைகள் மற்றும் உத்திகள் பற்றி நோக்குகின்றது.

அதாவது மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய சிவபுராணத்தையும் ஜோர்ஜ் அக்லோ போப் செய்த மொழிபெயர்ப்பையும் ஒப்பு நோக்கி அதில் அவர் கையாண்ட மொழி பெயர்ப்பு முறைமைகள், உத்திகள் என்பன இங்கே நோக்கப்படுகின்றன.

மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணமும் ஜோர்ஜ் அக்லோ போப் எனப்படும் மதகுருவினுடைய சிவபுராணமும் முதல் நிலை வளங்களாக இந்த ஆய்வில் கொள்ளப் படுகின்றன.

**ஜோர்ஜ் அக்லோ போப்**

தமிழ் கூறும் நல்லுலகில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற மொழிபெயர்ப்புப்பணி பற்றி நோக்குவோமாயின் அது மேலைத் தேசத்தவர்களின் வருகையுடனேயே எழுச்சி பெற்றது என்று கூறலாம். குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் கீழைத் தேசங்களுக்கு வருகை தந்த மேலை நாட்டவர் பலரும் தமிழ் இலக்கியப் பனுவல்களை ஆழ்ந்து கற்று மொழிபெயர்ப்பு செய்யும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அதே வேளை நம் தேசத்தவரும் மொழிபெயர்ப்புப் பணியில் முனைப்புக் காட்டியமையை மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் வண. ஜி.யு. போப் என்று குறிப்பிடப்படும் ஜோர்ஜ் அக்லோ போப் என்பவர் பல ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்து, தமிழ் மொழியைக் கற்று, பல அரிய பனுவல்களை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில

மொழிக்கு மொழிபெயர்த்த ஒரு கிறிஸ்தவ மதபோதகர் ஆவார்.

அவர் 1820 ஏப்ரல் 24 ஆம் நாள் கனடாவின் எட்லாட் இளவரசர் தீவில் பிறந்தார். தமது பதினாலாவது வயதிலேயே தம்மைத் திருச் சபையின் ஊழியத்துக்கு அர்ப்பணித்த போப் தென் இந்தியாவுக்குப் புறப்பட்டார். 1839 இல் தூத்துக்குடிக்கு அண்மையில் உள்ள சாயபுரத்தில் அவர் வந்து இறங்கினார். சாய புரத்தில் தமிழ் மாணவரான போப் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார்.[1]

போப் 1886 இல் திருக்குறள் மொழி பெயர்ப்பை நிறைவு செய்தார். 1893 இல் நாலடியாரை போப் மொழி பெயர்த்தார். திருவாசக மொழிபெயர்ப்பு ஒக்ஸ்ஃபோர்ட் டின் க்ளாறன்டன் அச்சகத்தில் 1900 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இப்பணிக்காக 1906 இல் போப் அவர்களுக்கு ஆசிய வேத்தியல் சங்கத்தின் தங்கப்பதக்கம் சூட்டப்பட்டது.[2]

திருவாசக மொழிபெயர்ப்பு முயற்சி பற்றி போப் பின்வருமாறு குறிப்பிடுவார் "இவ்வெளியீடு பற்றி எண்ணியிராத காலத்தில் ஒரு மாலைப்பொழுது, பிரார்த்தனை முடிந்த பின் ஒக்ஸ்ஃபோர்ட்டின் பலியோல் கல்லூரி யின் அதிபரோடுடனான உரையாடல் தமிழ்ப் புராணங்கள், கவிதை, தத்துவம் என்பவற்றை நோக்கித் திரும்பியது. "திருவாசகத்தை அச்சேற்றவேண்டும்" என்று அவர் கூற, "அதற்கு நெடுங்காலம் எடுக்குமே, யார் எனக்கு சிரஞ்சீவித்துவம் அளிப்பர்?" என நான் வினவினேன். "ஓர் அரும்பணியைத் தொடங்கிச் செய்வது நெடுநாள் வாழும் வழி, இதை முடிக்கும்வரை நீ வாழ்வாய்" எனத் தீர்க்க தரிசனமாகக் கூறினார் அவர். "நான் ஓய்ந்து சோரும் வேளையில் அவை என்னை ஊக்குவித்தன" என்பார் ஜி.யு போப் அவர்கள்.[3]

**திருவாசகம்**

ஞான நெறியில் நின்று இறைவன் மீது மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்ற திருவாசகம் எனும் தேன் துளிகள் ஈர்த்து ஈர்த்து உருக வைக்கும் தன்மை வாய்ந்தவை. இவற்றில் முதன்மையானது சிவபுராணம் ஆகும்.

திருமுறைகளில் பழைமையானவை எட்டாம், பத்தாம் திருமுறைகள் ஆகும். திரு வாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. இங்கு திருப்படை ஆட்சி எனப்படும் அத்வைத சித்தியில் இடம்பெறும் சிவபுராணம் உயர்ந்த ஒரு தத்துவப்பனுவல் ஆகும்.

திருவாசகத்தில் சிவபுராணம் மகாமேரு போன்று ஒரே செங்குத்தாயிருக்கிறது. அதைப் பூலோகக் கயிலாயம் எனலாம்.[4]

**முறைமைகளும் உத்திகளும்**

மொழி பெயர்ப்பு செயற்பாட்டில் எந்த மொழியில் மூலப்படைப்பு உள்ளதோ அதனை 'மூல மொழி' என்றும் எந்த மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்கிறோமோ அதனை 'இலக்கு மொழி' என்றும் கூறுவர்.

மொழிபெயர்ப்புப்பணியை ஆற்றும்போது பயன்படுத்துகின்ற முறையைப்பொறுத்து அதனை வகைப்படுத்தலாம்.[5]

இங்கே சிவபுராண மொழி பெயர்ப்பில் ஜி.யு.போப் கையாண்ட முறைமைகளை நோக்குவோம்.

1. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் (Metaphrase Translation or Literal Translation): மூல மொழியிலுள்ள சொற்களுக்கு இணையான சொற்களை குறிக்கோள்

மொழியில் அமைத்துக் கொள்வதாகும். உதாரணமாக, 'வாழ்க' அடிகள் அதாவது 'வாழ்க' என்று முடிவடையும் அடிகள் பெரும்பாலும் சொல்லுக்கு சொல்லான மொழிபெயர்ப்பாகவே அமைந்துள்ளன. இதன் மூலம் ஆங்கில வாசகர்களும் கருத்தைப் புரிந்து கொள்ள முடியும். 'Hail, foot of Him who becomes, abides, draws near as the Agamam' 'புல்லாகிப் பூடாய்ப்... ' எனும் அடிகள் சொல்லுக்கு சொல்லான மொழிபெயர்ப்பாக அழகாக அமைந்துள்ளன. 'Grass was I, shrub was I, worm, tree, Full many a kind of beast, bird, snake, Stone, man and demon. 'Midst Thy hosts I served The form of mighty Asuras, ascetics, gods I bore'

2. விரிவான மொழிபெயர்ப்பு (Amplification): மூல மொழியில் உள்ள கருத்துக்களை மொழி பெயர்த்துச் சொல்வதோடு அவை தொடர்பான வேறு சில செய்திகளையும் சேர்த்து விரிவாகச் சொல்வதாகும். எடுத்துக்காட்டாக, இங்கு 'நமசிவாய' எனும் பஞ்சாட்சர மந்திரம் 'Five letters' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தெரியாத வாசகனையும் அதனை அறிந்து கொள்ளத் தூண்டுவதாக இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

3. முழுமையான அல்லது சரியான மொழி பெயர்ப்பு (Close or Accurate Translation): ஒரு மொழியில் சொல்லப்படும் கருத்துக்களைப் பொருட்சிதைவு பிறழாத வகையிலும், மொழியின் அமைப்பு, சமுதாயச் சூழல் மற்றும் பண்பாட்டுக்கு ஏற்பவும் மிகப் பொருத்தமாக கூடுதல் குறைவு ஏதுமின்றி செய்வதாகும் சான்றாக, பிறப்பு – Continuity of birth. உண்மையில் மாணிக்கவாசகர் கருதுவது பிறப்பு இறப்பு சக்கரத்தையே. அதன் உண்மை அர்த்தம் இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

4. சுருக்கம் (Paraphrase or Abridgement): மூல மொழியில் காணப்படும் செய்திகளைக் கருத்தில் கொண்டு ஓரளவுக்குப் புரிந்து கொள்ளும் வகையில் சுருக்கமாகச் சொல்வதாகும். உதாரணமாக, 'நிறங்கள் ஓர் ...' எனும் அடியில் 'நிறங்கள்' என்பது பஞ்சபூதங்களை சுட்டி நிற்பதாக சுவாமி சித்பவானந்தர் கூறுவார். இங்கே போப் அவர்கள் 'Thou hast the colours five' என்று குறிப்பிட்டுள்ளார். இங்கே அவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் மேலைத்தேய வாசகர்கள் பயன் பெறுவர். இம்முறையில் செய்யப்படும் மொழிபெயர்ப்பின் வாயிலாக மூல மொழியில் காணப்படும் முழுமையான நிறைவைப் பார்க்க முடியாது. ஓரளவுக்கு சுட்டிக் காட்டுவதாகவே இது அமையும்.

5. தழுவல் (Adaptation): மூலநூலின் கருத்தை மட்டும் பெற்றுக் கொண்டு ஏனைய நிகழ்வுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்றவற்றை இங்கே மாற்றிக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, 'உய்ய என் உள்ளத்துள் ஓங் காரமாய் நின்ற மெய்யா' எனும் அடி 'O Truth as the OngAram dwelling in my soul' என சிறப்பாகவும் கருத்தோடும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. விமலா என்பதைக் குறிக்க 'O Spotless One' என மிகவும் பொருத்தமான நிகரன் கையாளப் பட்டுள்ளது.

6. மொழியாக்கம் (Transcreation): பிறிதொரு மொழியிலிருந்து மொழி பெயர்த்திருந் தாலும் கூட, நாம் மொழி பெயர்த்துள்ள மொழியின் மரபு அதில் காணப்பட வேண்டும். அவ்வாறு மொழி பெயர்ப்பதே மொழியாக்கம் ஆகும். சான்றாக, '...எந்தை அடி போற்றி' ... 'Praise to my Father's foot' '... சிவன் சேவடி போற்றி' ...'Praise to Civan's roseate foot' '...ஆராத

இன்பம் அருளும் மலை போற்றி' ... 'Praise to the Mount, in grace affording pleasures that cloy not' உணர்வு பூர்வமான மொழிபெயர்ப்பாய் இவை அமைந்துள்ளன.

இந்த முறைமைகளுக்கு அப்பால் பல உத்திகளையும் ஜி.யு. போப் அவர்கள் கையாண்டுள்ளமையை இங்கு காணமுடிகிறது. பொருத்தமான நிகரன்களைத் தேடிக் கண்டறிவதே மொழிபெயர்ப்புச் செயற்பாடு என்பார் அறிஞர் நீடா அவர்கள். அந்த வகையில் போப் அவர்களும் பொருத்தமான நிகரன்களைக் கையாண்டுள்ளமையைக் காண முடிகிறது.

எடுத்துக்காட்டாக 'வெல்க' அடிகளில் அழகான, பொருத்தமான ஆங்கிலப் பதங்களைக் காண முடிகிறது.

'புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க'

'Victory to the flower-foot of Him Who is far from those without'

மேலும் இங்கே 'bore', 'weary' என்பன 'இளைத்தேன்' என்பதற்கு மிகவும் பொருத்தமான நிகரன்களாகின்றன.

சில மொழி நுட்பங்கள் தெளிவாகக் கையாளப்பட்டுள்ளன.

உதாரணமாக,

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'

– 'By His Grace alone, Bowing before His feet'

இங்கு alone எனும் பதத்தை உபயோகித்தமை சிறப்பாக உள்ளது.

புலமை மிக்க சொல்லாட்சிகளும் மொழி பெயர்ப்பை அணி செய்கின்றன. சான்றாக 'Spotless Splendour', 'Effulgent One', 'Exceeding Tenderness' என்பவற்றைக் கூறலாம்.

திறமை வாய்ந்த சொல், வசனக் கட்டமைப்புக்களை இங்கே காண முடிகிறது. 'Unutterably subtle Intellect', 'Worshipping abides and Praising Thee, from falsehood freed', 'Hither return no more' ஆகியவை தக்க எடுத்துக்காட்டுக்களாகும்.

உண்மையில் சொற்களை மொழி பெயர்க்க முடியாத சந்தர்ப்பங்களில அல்லது, சரியான கருத்தைச் சொல்ல முற்படும் போது ஒலி பெயர்ப்பு செய்வதென்பது இன்றியமையாத ஒன்றாகிறது. ஒலி பெயர்ப்பு என்பது மூலச்சொல்லின் உச்சரிப்பை அல்லது ஒலியனை அவதானித்து அதற்கு இலக்கு மொழி எழுத்துக்களில் வரி வடிவம் கொடுப்பதாகும். மொழிபெயர்ப்புச் செயற் பாட்டில் ஒலிபெயர்ப்புச் செயற்பாடு இன்றியமையாததாகும்.

இங்கு ஜி.யு. போப்பின் சிவபுராண மொழிபெயர்ப்பில் பல்வேறு ஒலிபெயர்ப்புச் சொற்களை தேவையான இடங்களில் பொருத்தமான முறையில் காண முடிகிறது. நிகரன்கள் இல்லாதவிடத்து ஒலிபெயர்ப்பு செய்யப்படும். எடுத்துக்காட்டாக Vedas, Agamam இறைவனின் திருநாமம், இடங்களின் பெயர் என்பன ஒலிபெயர்ப்பினாலே குறிப்பிடப்படும். உதாரணமாக GOgari, Civan, Perun Turrai சில ஆன்மீகச்சொற்கள் மூலமொழியில் உள்ளவாறு ஒலிபெயர்த்தே பயன்படுத்தப்படும்.

சான்றாக OngAram, சில சமயங்களில் கருத்தைத் தெளிவாக முன்வைப்பதற்காக ஒலிபெயர்ப்புச் செய்து சில சொற்கள் பயன் படுத்தப்படும். எடுத்துக்காட்டாக Guru, PAcam என்பவற்றைக்குறிப்பிடலாம்.

இத்தகைய முறைமைகளும் உத்திகளும் ஜி.யு.போப் அவர்களின் சிவபுராண மொழி பெயர்ப்பில் காணப்படுகின்றன.

**நிறைவுரை**

வெளிநாட்டு மதகுரு ஒருவர் தமிழ்ப்பனுவல் ஒன்றை ஆழ்ந்து கற்று மொழிபெயர்ப்பு

செய்துள்ளமை போற்றற்குரிய ஒரு விடய மாகும்.

அவர் சமய போதகராக விளங்கியமையால் சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமை இருந்தது. இதனால் அவரது மொழிபெயர்ப்புக்களில் அத்துறைகள்சார் சொற்களஞ்சியத்திலிருந்தான சொற்களைக் காண முடிகிறது. போப் கையாண்டுள்ள பொருத்தமான முறைமைகள், தொடர்ந்து மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருப் போருக்கு, ஈடுபடுவோருக்கு பயனளிப்பனவாக உள்ளன. கையாளப்பட்டுள்ள பொருத்தமான நிகரன்கள், தேவையான வேளைகளில் விளக்கத்துடனான நிகரன்கள், பொருள் பொதிந்ததான நிகரன்கள், மொழி நுட்பங்கள், ஒலிபெயர்ப்பு என்பன பிற்கால மொழி பெயர்ப் பாளர்களுக்கு முன்னோடிகளாகவும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகவும் விளங்குகின்றன.

மொழிபெயர்ப்பினைப் படிப்போருக்குக் கூட சிவபுராணத்தின் உட்கருத்தைப் புரிய வைத்து அதன் சுவையைக் கொடுப்பதாக போப் மொழிபெயர்ப்பினை மேற்கொண்டுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. பத்மநாதன்,சோ., *(2011)*, **போப்பையர் மொழிபெயர்த்த திருவாசகம் : திருச்சதகத்தினூடாக ஒரு பார்வை,** கொழும்பு. *ப.86.*
2. Pope.G.U., (1990), **The Tiruvacagam**, Clarendon Press, Oxford, p. XIV.
3. Pope.G.U., (1990), op.cit, p. XIV.
4. சித்பவானந்தர்,சு., *(2000)*, **திருவாசகம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் , திருச்சிராப் பள்ளி மாவட்டம், ப. *7.*
5. சிவசண்முகம்,ச., தயாளன்,வே., *(1994)*, **மொழி பெயர்ப்பியல்,** அன்னம் (பி) லிட் , சிவகங்கை , பக். *31 - 35.*